# லெனின்

# மார்க்சியமும் திருத்தல்வாதமும்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# வி. இ. லெனின்

# மார்க்சியமும் திருத்தல்வாதமும்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-356}{014(01)-84}$ 334—84

## பதிப்பாளர் குறிப்பு

இந்தக் கட்டுரை, மார்க்ஸ் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட கார்ல் மார்க்ஸ் (1818—1883) எனும் தொகுப்பு நூலுக்காக லெனினுல் 1908ம் ஆண்டு மார்ச் மாதத்தின் இரண்டாவது பாதியில் எழுதப்பட்டது. இந்தத் தொகுப்பு நூலுக்கான கட்டுரைப் பொருளாக லெனின் குறிப்பாக திருத்தல்வாதத் துடனை போராட்டத்தைப் பற்றிய பிரச்சினைகளை, அந்தக் காலகட்டத்தில், ருஷ்யாவில் 1905—1907ம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியடைந்ததும் பிற்போக்கு தலைவிரித்தாடிய காலத்தில், மிக முக்கியமானவையாகக் கருதி எடுத்துக் கொண்டது விசேஷப் பொருளுடையது.

மார்க்சியத்தின் வளர்ச்சியும் தொழிலாளி வர்க்கத்தில் அதன் சித்தாந்தங்கள் பரவி, வலுவடைந்து வருவதும், அதற்கு விரோதமான தத்துவங்களின் தரப்பிலிருந்து மார்க்சியத்தின் மேலான தாக்குதல்களைத் தவிர்க்க இயலாதவாறு வலுப்படுத்தும் என்று லெனின் எழுதினுர். மார்க்சியம் இரு தரப்புக்களிலிருந்து தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகிறது: மார்க்சியத்தை மறுத்து, அழித்தொழிக்க வீணுக முயலும் அதிகாரபூர்வமான பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் நேரடித் தாக்குதல்களோடு கூட, திருத்தல்வாதிகளால் பயன்படுத்தப்படும் மறைவான போராட்ட முறைகளும் உள்ளன. மார்க்சின் போதனைகளைத் திருத்துதல், அதை திரும்ப ஆராய்தல் என்ற போர்வையின் கீழ் மார்க்சியத்தை உள்ளேயிருந்தே குலைக்க திருத்தல்வாதம் முயலுகிறது என்பதில்தான் அதன் அபாயம் அடங்கியுள்ளது. திருத்தல்வாதக் கருத்துக்களின் உள்ளடக்கத்தை லெனின் வெட்டவெளிச்சமாக்கி, திருத்தல்வாதிகளின் தத்துவ ''ஆராய்ச்சிகள்'' பூர்ஷ்வா சித்தாந்

தத்தின் சிதைந்த, பழையதாகிப்போன வறட்டுச் சூத்திரங்களைத் திரும்பச் சொல்வதே என்றும் சாராம்ச ரீதியாக திருத்தல்வாதம் என்பது மிதவாத பூர்ஷ்வா கண்ணேட்டங்களின் ஒரு வகையே என்றும் காட்டுகிறுர்.

மார்க்சியத்தின் தனிப்பட்ட சில கருத்துக்களுக்கு எதிராக திருத்தல்வாதம் தனது தாக்குதல்களைத் தொடுக்கவில்லை, மாருக, தத்துவம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான சோஷலிசம் ஆகிய மார்க்சியத்தின் எல்லா அம்சங்களையும் திருத்த அது முயலுகிறது என்று லெனின் கோடிட்டுக் காண்பித்தார்.

தத்துவஞானத் துறையில் திருத்தல்வாதிகள் பூர்ஷ்வா ''விஞ்ஞானத்தின்'' வாலைப் பற்றிக் கொண்டு இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை மறுத்து, புரட்சிகர இயக்கவியலை ''எளிய (மற்றும் அமைதியான) பரிணுமத்தாலும்'' பொருள்முதல்வாதத்தை அகவய கருத்துமுதல்வாதத்தாலும் மாற்றி மோதிப் பார்க்கின்றனர்.

திருத்தல்வாதிகளின் பொருளாதாரத் தத்துவங்கள், உதாரணமாக பொருளாதார நெருக்கடிகள் நடைபெற்று வந்த காலம் மாறிவிட்டது என்ற அவர்களது கூற்றுக்கள், முற்றிலும் தவறுனவை. நெருக்கடிகள் மறைந்துவிட்டதைப் பற்றிய திருத்தல்வாதிகளின் வாதங்களை வாழ்க்கையே தவறென நிராகரிக்கிறது. ''குறிப்பிட்ட நெருக்கடிகளின் வடிவங்களும் வரிசைமுறையும் சித்திரமும் மாறினவேயன்றி நெருக்கடிகள் முதலாளித்துவ அமைப்பின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாய்த்தான் நிலைத்திருந்தன'' (பக்கம் 13). ஏகாதிபத்திய சகாப்தத்திற்கு உரிய, முதலாளித்துவ சமுதாய பொருளாதாரத்தின் புதிய போக்குகளைக் குறிப்பிட்ட லெனின், அதே சமயம் உற்பத்தியின் அராஜகத்தன்மை வலுவடையும் என்றும் உழைக்கும் மாமக்களின் வாழ்க்கைத் தரம் குறையும் என்றும் மூலதனத்தின் ஒடுக்குமுறை உக்கிரமடையும் என்றும் வலியுறுத்திஞர். பூர்ஷ்வா ஜனநாயகச் சூழ்நிலைகளில் வர்க்க முரண்பாடுகளும், வர்க்கப் போராட்டமும் மங்கிவிடும் என்பதைப் பற்றிய திருத்தல்வாத ''தத்துவங்களை'' அவர் கண்டித்தார். பூர்ஷ்வா பாராளுமன்ற முறை ''நெருக்கடிகளையும், அரசியல் புரட்சிகளையும்'' அகற்றுவதில்லை என்று அவர் வரலாற்று ரீதியான உண்மைகளைக் கொண்டு நிரூபித்தார்.

திருத்தல்வாதத்தின் சாரம், தொழிலாளி வர்க்கத்தின் இறுதி லட்சியத்தை, சோஷலிசத்தின் வெற்றிக்கான போராட்டத்தைக் கைவிடுவதாகும். திருத்தல்வாதிகள் மாயையான நொடிப் பொழுது லாபங்களுக்காக பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களைப் பலியிடுகின்றனர்.

திருத்தல்வாதம் என்பது முதலாளித்துவ சமுதாயத்தில் ஆழமான வேர்களை உடைய ஒரு சர்வதேச புலப்பாடு என்றும், கட்சியின் கடமை தொழிலாளர் இயக்கத்தில் திருத்தல் வாதம் பரவுவதற்கு எதிராக இடையருத, முறையான, உறுதியான போராட்டத்தை நடத்துவதாகும் என்றும் லெனின் போதிக்கிருர். விஞ்ஞான கம்யூனிசத்தின் கருத்துக்கள் வலுவடைந்து வருகையில் திருத்தல்வாதத்துடனை போராட்டம் உக்கிரமடையும் என்பதை முன்கூட்டியே கண்ட லெனின், திருத்தல்வாதத்தின் மீதான மார்க்சியத்தின் வெற்றி தவிர்க்க இயலாதது என்று முன்னறிவிக்கிருர். ''பத்தொன்பதாம் நூற்ருண்டின் முடிவில் திருத்தல் வாதத்தை எதிர்த்துப் புரட்சிகர மார்க்சியம் நடத்தும் சித்தாந்தப் போராட்டமானது, குட்டி முதலாளித்துவப் பகுதியினரின் எல்லா ஊசலாட்டங்களையும் பலவீனங்களையும் மீறித் தனது இலட்சியத்தின் முழு வெற்றியை நோக்கி முன்னேறி வீறு நடைபோடும் பாட்டாளி வர்க்கத்தினுடைய மாபெரும் புரட்சிப் போர்களின் பீடிகையே ஆகும்'' என்ற இந்த அற்புதமான கட்டுரையின் இறுதி வாக்கியம் தீர்க்க தரிசனத்தோடு ஒலிக்கிறது (பக்கம் 19).

நவீன சீர்திருத்தவாதத்திற்கெதிராகவும் திருத்தல் வாதத்திற்கெதிராகவும் சர்வதேச கம்யூனிச இயக்கம் நடத்தி வரும் போராட்டத்திற்கு மார்க்சியமும் திருத்தல்வாதமும் என்ற லெனினுடைய கட்டுரை அத்தியாவசியமான முக்கியத்துவமுடையது. பாட்டாளி வர்க்கத்தின் மீதான பூர்ஷ்வா தாக்கம் என்ற முறையில் திருத்தல்வாதத்தைப் பற்றியும் திருத்தல்வாதத்தின் வர்க்க அடிப்படைகளைப் பற்றியும் அதன் சர்வதேச தன்மையைப் பற்றியும் புரட்சிகர மார்க்சியத்துக்கு எதிராக அதனுல் பயன்படுத்தப்படும் போராட்ட முறைகளைப் பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் நவீன திருத்தல்வாதத்தின் சாரத்தையும் கம்யூனிச இயக்கத்தின் உள்ளே அதன் பிளவு நடவடிக்கைகளின் வடிவங்களையும் நன்கு அறிய துணை புரிகின்றன.

வடிவகணித வெளிப்படை உண்மைகள் மனித நலன்களைப் பாதிக்குமாயின் அவற்றை மறுக்க நிச்சயம் முயற்சி செய்யப்படும் எனக் கூறும் பிரபல முதுமொழி ஒன்று உண்டு. இறையியலின் பழங்காலத் தப்பெண்ணங்களுக்கு முரணான இயற்கை-வரலாற்றுத் தத்துவங்களுக்கு வெறித்தனமான எதிர்ப்பு காட்டப்பட்டது, இன்னமும் காட்டப்பட்டு வருகிறது. ஆகவே மார்க்சியப் போதனை—தற்காலச் சமுதாயத்தின் மிகவும் முன்னேறிய வர்க்கத்துக்கு அறிவொளி ஊட்டி அதை ஒழுங்கமைக்க நேரடியாய் உதவுவதும், இந்த வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளைச் சுட்டிக்காட்டுவதும், தற்போதுள்ள அமைப்பு (பொருளாதார வளர்ச்சி காரணமாய்) தவிர்க்க முடியாதபடி வீழ்த்தப்பட்டு அதனிடத்தில் ஒரு புதிய அமைப்பு தோன்றுமென்பதை நிரூபிப்பதுமான மார்க்சியப் போதனை—அதன் வாழ்வு முழுவதும் ஒவ்வொரு அடியும் போராடியே முன்னேற வேண்டியிருந்துள்ளது என்பதில் வியப்பு ஏதுமில்லை.

முதலாளித்துவ விஞ்ஞானம் மற்றும் தத்துவஞானத்துக்கும் இது பொருந்தும் என்பது பற்றி கூறத் தேவையில்லை. சொத்துடைத்த வர்க்கங்களின் வளரும் தலைமுறைக்கு வெறி மயக்கமூட்டவும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களுக்கு எதிராய் அதைப் ''பயிற்றுவிக்கவும்'' அதிகாரபூர்வமான பேராசிரியர்களால் அதிகாரவர்க்க முறையிலே இவை போதிக்கப்படுகின்றன. இந்த விஞ்ஞானம் மார்க்சியம் என்பதாய் ஒன்று இருப்பதைக் கேட்பதற்குக் கூட மறுக்கிறது; மார்க்சியம் ஏற்கெனவே பொய்யென நிரூபிக்கப்

பட்டு அழித்தொழிக்கப்பட்டுவிட்டதெனக் கூறுகிறது. சோஷலிசத்தை மறுத்துப் பிழைப்புத் தேடிக் கொள்ளும் இளம் விஞ்ஞானிகளும், காலாவதியாகிவிட்ட எல்லா வித ''அமைப்புகளின்'' மரபுகளையும் பாதுகாத்து நிற்கும் தள்ளாத கிழவர்களும் ஒருங்கே துடித்தெழுந்து மார்க்சைத் தாக்குகின்றனர். மார்க்சியத்தின் முன்னேற்றமானது, தொழிலாளி வர்க்கத்தினரிடையே அதன் கருத்துக்கள் பரவி வேரூன்றி உறுதி பெறுவதானது மார்க்சியத்தின் மீதான இந்த முதலாளித்துவத் தாக்குதல்களின் வேகத்தையும் கடுமையையும் தவிர்க்க முடியாதபடி அதிகரிக்கச் செய்கிறது. அதிகாரபூர்வமான விஞ்ஞானத்தால் ''அழித்தொழிக்கப்படும்'' ஒவ்வொரு முறையும் மார்க்சியம் மேலும் மேலும் வலுவும் உறுதியும் உயிர்த்துடிப்பும் பெற்று ஓங்குகிறது.

தொழிலாளர் வர்க்கப் போராட்டத்துடன் தொடர்பு கொண்டு பிரதானமாய்ப் பாட்டாளி வர்க்கத்திடம் நிலவும் போதனைகளிடையே கூட மார்க்சியம் தனது நிலையை எடுத்த எடுப்பிலே உறுதியாய் நாட்டிக் கொண்டுவிடவில்லை. அதன் வாழ்வின் முதல் அரைநூற்றாண்டில் (1840ம் ஆண்டுகளிலிருந்து தொடங்கி) மார்க்சியம் அடிப்படையிலேயே தனக்கு விரோதமான தத்துவங்களுக்கு எதிராய்ப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. நாற்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானத்தின் பாற்பட்ட கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தினராய் இருந்த தீவிர இளம் ஹெகல்வாதிகளுடன்[1] கணக்குத் தீர்த்துக் கொண்டனர். நாற்பதாம் ஆண்டுகளின் முடிவில் பொருளாதார போதனைத் துறையில் புரூதோனியத்தை[2] எதிர்த்துப் போராட்டம் ஆரம்பமாயிற்று. கொந்தளிப்பு மிக்க 1848ல் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட கட்சிகளையும் போதனைகளையும் பற்றிய விமர்சனத்தின் வாயிலாய் ஐம்பதாம் ஆண்டுகளில் இந்தப் போராட்டம் முடிவடையலாயிற்று. அறுபதாம் ஆண்டுகளில் போராட்டம் பொதுத் தத்துவத் துறையிலிருந்து நேரடியான தொழிலாளர் இயக்கத்துக்கு மேலும் நெருங்கிய ஒரு துறைக்கு மாற்றப்பட்டது; அகிலத்திலிருந்து பக்கூனின்வாதம்[3] வெளியேற்றப்பட்டது. எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சிறிது காலத்துக்குப் புரூதோன் ஆதரவாளரான முல்பெர்கரும், எழுபதாம் ஆண்டுகளின் கடைப் பகுதியில் நேர்காட்சிவாதி[4] டூரிங்கும்

ஜெர்மனியில் முக்கியமாயிருந்தனர். ஆனால் அப்பொழுது பாட்டாளி வர்க்கத்திடம் இருவருக்கும் மிகச் சொற்ப செல்வாக்கே இருந்தது. தொழிலாளர் இயக்கத்தில் ஏனைய எல்லா சித்தாந்தங்களின் மீதும் இதற்குள்ளாகவே மார்க்சியம் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி வெற்றி கண்டு வந்தது.

தொண்ணூறும் ஆண்டுகளுக்குள் இந்த வெற்றி பிரதானமாய் நிறைவு எய்தி விட்டது. புரூதோனிய மரபுகள் வேறு எங்கேயும் விட மிக அதிகக் காலத்துக்கு நிலைத்திருந்த லத்தீனிய நாடுகளிலுங்கூட தொழிலாளர் கட்சிகள் தமது வேலைத்திட்டங்களையும் போர்த்தந்திரங்களையும் நடைமுறையில் மார்க்சிய அடித்தளங்கள் மீதுதான் வகுத்துக் கொண்டன. தொழிலாளர் இயக்கத்தின் புத்துயிர் பெற்ற சர்வதேச நிறுவனம்—காலத்துக்குக் காலம் கூடிய சர்வதேசக் காங்கிரஸ்களின் வடிவில் அமைந்த இது—தொடக்கத்திலிருந்து அனேகமாய்ப் போராட்டமின்றியே மார்க்சியக் கருத்தோட்டத்தையே முக்கியமான எல்லாக் கூறுகளிலும் ஏற்றுக் கொண்டிருந்தது. இவ்விதம் மார்க்சியம் தனக்கு விரோதமான ஏறக்குறைய ஒருமித்ததாய் அமைந்த போதனைகள் யாவற்றையும் வெளியேற்றியபின் அந்தப் போதனைகளில் அடங்கிய போக்குகள் பிற வழிகளில் தலை காட்ட முற்பட்டன. போராட்டத்தின் வடிவங்களும் முகாந்திரங்களும் மாறினவேயன்றி போராட்டம் தொடர்ந்து நடைபெற்றே வந்தது. மார்க்சியத்தின் வாழ்விலான இரண்டாவது அரை நூற்றாண்டானது (தொண்ணூறும் ஆண்டுகளில்) மார்க்சியத்துக்கு விரோதமாய் அதனுள்ளிருந்தே செயல்பட்ட ஒரு போக்கிற்கு எதிரான போராட்டத்துடன் தொடங்கிற்று.

ஒரு காலத்தில் வைதிகமான மார்க்சியவாதியாய் இருந்த பெர்ன்ஷ்டைன் பெயரை இப்போக்கு[5] தாங்கியுள்ளது. அவர் மிக்க ஆரவாரம் எழுப்பியவர்; மார்க்சுக்குத் திருத்தங்கள் செய்வதில் மார்க்சைத் திருத்துவதில், திருத்தல்வாதத்தின் மிக முனைப்பான வெளிப்பாடாய் இருந்தவர். ருஷ்யாவிலுங்கூட, பொருளாதாரத்தில் நாட்டின் பிற்பட்ட நிலை காரணமாகவும் பண்ணையடிமை முறையின் மீதமிச்சங்களின் சுமையால் ஒடுக்கப்பட்ட விவசாயிகள் மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையோராய் இருப்பதன்

காரணமாகவும் மார்க்சியமல்லாத சோஷலிசம் இயல்பாகவே வேறெங்கேயும் விட மிக நெடுங்காலத்துக்கு நிலைத்திருந்துள்ள ருஷ்யாவிலுங்கூட தெட்டத் தெளிவாய் நம் கண்முன்னே இது திருத்தல்வாதமாய் மாறிக் கொண்டிருக்கிறது. நிலப் பிரச்சினையிலும் (நிலம் அனைத்தையும் ஊர் ஆட்சிக்குட்படுத்தும் திட்டத்திலும்) மற்றும் வேலைத் திட்டம், போர்த்தந்திரம் பற்றிய பொதுப் பிரச்சினைகளிலும் நமது சமூக-நரோத்னிக்குகள்[6] பழைய கருத்தமைப்பின்—இந்தப் பழைய கருத்தமைப்பு தனக்குரிய வழியில் ஒருமித்ததாய் அமைந்து அடிப்படையிலேயே மார்க்சியத்துக்குப் பகைமையானதாய் இருந்தது — அழுகிப்போன காலாவதியாகிவிட்ட மீதமிச்சங்களுக்குப் பதிலாய் மார்க்சுக்குத் ''திருத்தங்கள்'' செய்வதை மேலும் மேலும் கைக்கொண்டு வருகின்றனர்.

மார்க்சியத்துக்கு முற்பட்ட சோஷலிசம் நொறுக்கப்பட்டுவிட்டது. முன்பு போல தனது சொந்த அடிப்படையிலிருந்து போராடுவதற்குப் பதிலாய் இப்பொழுது அது மார்க்சியத்தின் பொது அடிப்படையிலே நின்று திருத்தல்வாதமாய்ப் போராட்டத்தை நடத்தி வருகிறது. ஆகவே திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தைப் பரிசீலனை செய்வோம்.

தத்துவஞானத் துறையில் திருத்தல்வாதமானது பூர்ஷ்வா பேராசிரியர் பாணியைச் சேர்ந்த ''விஞ்ஞானத்தைப்'' பின் தொடர்ந்து சென்றது. பேராசிரியர்கள் ''கான்ட்டுக்குத் திரும்பிச் சென்றனர்''—திருத்தல்வாதம் உடனே நவீன கான்ட்டியவாதிகளின்[7] வாலைப் பற்றிக் கொண்டு பின் சென்றது. தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை எதிர்த்துப் பாதிரிமார்கள் ஆயிரம் தரம் கூறி வந்திருக்கும் வழக்கமான வெற்றுரைகளைப் பேராசிரியர்கள் திருப்பிக் கூறினர்— உடனே திருத்தல்வாதிகளும் இளக்காரமாய் நகைத்துக் கொண்டு பொருள்முதல்வாதம் நெடுங் காலத்துக்கு முன்பே ''தவறென நிரூபிக்கப்பட்டுவிட்டதே'' என்று (கடைசியாய் வெளிவந்த Handbuchஇலிருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே திருப்பிக் கூறி) முணுமுணுத்தனர். பேராசிரியர்கள் ஹெகலைச் ''செத்த நாய்''[8] என ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதேபோதில் ஹெகலினுடையதை விட ஆயிரம் மடங்கு அற்பமான, படுமட்டமான கருத்துமுதல்வாதத்தை உப

தேசம் செய்தபடியே மிக அலட்சியமாய் இயக்கவியலிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டனர்—உடனே திருத்தல்வாதிகள் அவர்கள் பின்னுல் ஓடி, ''தந்திரமான'' (மற்றும் புரட்சிகரமான) இயக்கவியலைக் கைவிட்டு அதற்குப் பதில் ''எளிய'' (மற்றும் அமைதியான) ''பரிணுமத்தைக்'' கைக்கொண்டு விஞ்ஞானத்தைத் தத்துவஞான வழியில் கொச்சையாக்கி இழிவுபடுத்தும் சகதிக் குழியிலே சிக்கித் தவித்தனர். பேராசிரியர்கள் தமது கருத்துமுதல்வாத, ''விமர்சன'' அமைப்புகளை ஆதிக்கத்திலிருந்த மத்திய காலத்திய ''தத்துவஞானத்துக்கு'' (அதாவது இறையியலுக்கு) உகந்தவாறு சரிசெய்து கொள்வதின் வழியே ஆட்சியாளர்களிடமிருந்து தமது சம்பளங்களைச் சம்பாதித்துக் கொண்டனர்—திருத்தல்வாதிகளும் உடனே அவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டனர், தற்கால அரசு சம்பந்தமாய் அல்லாமல் முன்னேறிய வர்க்கத்தின் கட்சி சம்பந்தமாய் மதத்தை அவரவரது ''தனிப்பட்ட விவகாரமாக்க'' முயன்றனர்.

இவ்வாறு மார்க்சைத் திருத்தும் ''திருத்தங்களுக்கு'' வர்க்க முறையில் மெய்யான பொருள் என்னவென்பது கூருமலே விளங்கும். சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தில் பிளெஹானவ் ஒருவர்தான் திருத்தல்வாதிகளுடைய படுமோசமான இந்த வெற்றுரைகளை முரணற்ற இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணேட்டத்திலிருந்து விமர்சித்துக் கண்டித்த மார்க்சியவாதி என்பதை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம். பிளெஹானவின் போர்த்தந்திரச் சந்தர்ப்பவாதத்தை விமர்சிக்கிறதாய் வேஷம் போட்டுக் கொண்டு பழைய பிற்போக்குத் தத்துவஞானக் குப்பைக் கூளத்தைக் கள்ளத்தனமாய் உள்ளே கொண்டுவர மிகவும் தவருன முயற்சிகள் செய்யப்படும் இத்தருணத்தில் இதை மேலும் அழுத்தந்திருத்தமாய் வலியுறுத்துவது அவசியமாகும்.*

---

* பக்தானவ், பஸாரவ், மற்றும் சிலர் எழுதும் மார்க்சியத் தத்துவஞானம் பற்றிய கட்டுரைகள் என்னும் புத்தகத்தைப் பார்க்கவும். இப்புத்தகத்தைப் பரிசீலிக்க இது வல்ல இடம். நவீன கான்ட் வழிப்பட்ட திருத்தல்வாதிகளைப் பற்றி மேலே நான் கூறியுள்ளவை யாவும் இந்தப் ''புதிய''

அரசியல் பொருளாதாரத்துக்கு வருவோமாயின் இத் துறையில் திருத்தல்வாதிகளுடைய ''திருத்தங்கள்'' மேலும் அதிக விரிவாகவும் நுட்பமானவையாயும் இருந்ததை முதற் கண் குறிப்பிடுதல் வேண்டும். ''பொருளாதார வளர்ச்சி பற்றிய புதிய விவரங்களைக்'' கொண்டும் பொது மக்களை வயப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. பெருவீத உற்பத்தி குவிவதும் அது சிற்றளவான உற்பத்தியை அகற்றிடுவதும் விவசாயத்தில் நடைபெறுவதே இல்லையென்றும் வர்த்தகத் திலும் தொழில் துறையிலும் மிகவும் மெதுவாகவே நடை பெறுகின்றன என்றும் கூறப்பட்டது. நெருக்கடிகள் இப் பொழுது அரிதாகியதோடு அவற்றின் பலம் குறைந்து விட்டதாகவும், இவற்றை அறவே நீக்கிவிடும் ஆற்றலைக் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் மூலதனத்துக்கு அளித்திடு மென எதிர்பார்க்கலாம் என்றும் கூறப்பட்டது. வர்க்கப் பகைமைகளின் கடுமை மேலும் மேலும் குறைந்து தணிந்து வரும் போக்கின் காரணத்தால் முதலாளித்துவம் சந்திக்கச் சென்று கொண்டிருக்கும் ''அழிவுத் தத்துவம்'' ஆதாரமற்ற தாகுமெனக் கூறப்பட்டது. முடிவில், மார்க்சின் மதிப்புத் தத்துவத்தை பேம்-பாவர்க்கின் வழியில் திருத்துவதில் தவறு ஒன்றுமில்லை என்றும் கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளில் திருத்தல்வாதிகளை எதிர்த்து நடத்திய போராட்டமானது, இதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு டூரிங்குடன் எங்கெல்ஸ் நடத்திய சர்ச்சையைப் போல் அதே அளவுக்குப் பயனுள்ள முறையில் சர்வதேச சோஷலிசத்தில் தத்துவார்த்தச் சிந்தனையை மறுமலர்ச்சி பெறச் செய்தது. உண்மைத்தகவல்கள், புள்ளிவிவரங்கள் இவற்றின் துணை கொண்டு திருத்தல்வாதிகளுடைய வாதங் கள் பகுத்தாராயப்பட்டன. தற்காலச் சிற்றளவு உற் பத்தி குறித்து திருத்தல்வாதிகள் முனைந்து நின்று தமக்குச் சாதகமான சித்திரம் தீட்டினர் என்று நிரூபிக்கப்பட்டது. தொழில் துறையில் மட்டுமின்றி விவசாயத்திலுங்கூட சிற்றள வான உற்பத்தியை விடப் பெருவீத உற்பத்தியே தொழில்

---

நவீன ஹியூம்-பெர்க்லி வழிப்பட்ட திருத்தல்வாதிகளுக்கும் சாராம்சத்தில் பொருந்தும் என்பதை வருங்காலத்தில் கூடிய சீக்கிரம் ஒரு கட்டுரைத் தொடரிலோ, தனிப் பிரசுரத்திலோ நிரூபிப்பேன் என்று மட்டும் தற்போது குறிப்பிடுகிறேன்.[9]

நுணுக்க வழியிலும் வர்த்தக வழியிலும் மேலாயுள்ளது என்று மறுக்க முடியாத உண்மைத்தகவல்கள் மெய்ப்பிக் கின்றன. ஆனுல் பரிமாற்றப் பண்ட உற்பத்தி விவசாயத்தில் மிகக் குறைவான வளர்ச்சியே பெற்றிருக்கிறது; பொது வாகப் பேசுமிடத்து, தற்காலப் புள்ளிவிவரவியலாளர்களும் பொருளியலாளர்களும் உலகப் பொருளாதாரத்தின் பரி மாற்ற நிகழ்ச்சிப் போக்கினுள் விவசாயம் மேலும் மேலும் இழுத்துக் கொள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டும் தனிக் கிளை களையும் (சில நேரங்களில் செயற்பாடுகளையுங்கூட) தேர் வாய்வு செய்வதில் அதிகத் தேர்ச்சியுடையோராய் இல்லை. இடையருது உணவுத் தரத்தை மோசமாக்கியும் நிரந்தரப் பட்டினியாலும் வேலை நேரத்தை அதிகமாக்கியபடியும் கால்நடைகளின் தரத்தையும் பராமரிப்பையும் சீர்கேடுறச் செய்தும்தான்—சுருக்கமாய்க் கூறினுல் முதலாளித்துவப் பட்டறை உற்பத்தியை எதிர்த்துக் கைத்தொழில் உற்பத்தி தன்னை நிலைநிறுத்திவந்த அதே வழிகளில் தான்—சிற்றளவான உற்பத்தியானது இயற்கைப் பொருளாதாரத்தின் இடிபாடு கள் மீது தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. விஞ்ஞானத் திலும் தொழில்நுணுக்கத்திலும் ஏற்படும் ஒவ்வொரு முன் னேற்றமும் முதலாளித்துவச் சமுதாயத்தில் சிற்றளவு உற் பத்தியின் அடித்தளங்களுக்குத் தவிர்க்க முடியாதவாறும் விடாப்பிடியாகவும் குழி பறிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் குழப்படியாகவும் சிக்கலாகவுமுள்ள இந்த நிகழ்ச்சிப் போக்கை அதன் எல்லா வடிவங்களிலும் ஆராய்வதும், முத லாளித்துவத்தில் சிறு உற்பத்தியாளர் அழியாது நிலைப்பது முடியாதென்பதையும் முதலாளித்துவத்தில் விவசாயியின் சிறு சாகுபடிக்குக் கதிமோட்சமில்லை என்பதையும் பாட் டாளியின் கண்ணோட்டத்தை விவசாயி ஏற்பது அவசியம் என்பதையும் தெளிவுபடுத்திக் காட்டுவதும் சோஷலிஸ்டு அரசியல் பொருளாதாரத்தின் கடமையாகும். இந்தப் பிரச்சினையில் ஒருசார்பாகவும் முதலாளித்துவத்தின் முழு அமைப்புடன் தொடர்பின்றியும் சேர்ந்து கொண்ட விவரங் களின் அடிப்படையில் திருத்தல்வாதிகள் மேம்போக்கான பொது முடிவுகளுக்கு வந்து விஞ்ஞானத்தின் கண்ணோட் டத்தில் தவறு செய்தனர். புரட்சிகரப் பாட்டாளியின் பார்வை நிலையை ஏற்குமாறு வற்புறுத்துவதற்குப் பதிலாய் சிறு உடைமையாளனின் போக்கை (அதாவது முதலாளி

வர்க்கத்தினரின் போக்கை) ஏற்குமாறு அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ தவிர்க்க முடியாதபடி விவசாயியை அழைத்த தன் மூலம் அல்லது வற்புறுத்தியதன் மூலம் அரசியலின் கண்ணேட்டத்தில் அவர்கள் தவறு செய்தனர்.

நெருக்கடிகளின் தத்துவம் குறித்தும் அழிவுத் தத்து வம் குறித்தும் திருத்தல்வாதத்தின் நிலே மேலும் படுமோச மானதாகவே இருந்தது. மிகச் சொற்ப காலத்துக்கு மட்டுமே தான், அதுவும் மிக மோசமான பார்வைக்கேடு உள்ளவர்தான் ஒரு சில ஆண்டுகளில் காணப்பட்ட தொழில் துறை ஏற்றம் மற்றும் செழிப்பினுல் வயப்படுத் தப்பட்டு மார்க்சின் தத்துவத்தினுடைய அடிப்படைகளேத் திருத்தியமைக்க வேண்டுமென நினேக்க முடியும். நெருக்கடி கள் கடந்த காலத்துக்குரியனவாகி விடவில்லே, செழிப்பைப் பின்தொடர்ந்து நெருக்கடி வருகிறது என்பதை யதார்த்த நிலேமைகள் மிக விரைவாகவே திருத்தல்வாதிகளுக்குத் தெளிவுபடுத்தின. குறிப்பிட்ட நெருக்கடிகளின் வடிவங் களும் வரிசைமுறையும் சித்திரமும் மாறினவேயன்றி நெருக் கடிகள் முதலாளித்துவ அமைப்பின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாய்த்தான் நிலேத்திருந்தன. கார்ட்டல்களும் டிரஸ்டு களும் உற்பத்தியை ஒன்றுபடுத்திய அதே நேரத்தில் எல் லோருக்கும் கண்கூடாய்த் தெரியும்படியான முறையில் உற் பத்தியின் அராஜகத்தையும் பாட்டாளி வர்க்கத்தினுடைய வாழ்க்கைக் காப்புறுதியின்மையையும் மூலதனத்தின் ஒடுக்குமுறையையும் தீவிரப்படுத்தி இதன் மூலம் வர்க்கப் பகைமைகளே முன்பின் கண்டிராத அளவுக்குக் கடுமையாக் கின. முதலாளித்துவமானது அழிவை நோக்கி—தனிப்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடிகளேக் குறிக்கும் பொருளி லும் முதலாளித்துவ அமைப்பு அனேத்தின் முழு அழிவைக் குறிக்கும் பொருளிலும்—விரைந்தோடிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பாய் இதே புதிய பகாசுர டிரஸ்டுகளின் மூலம் மிக மிகத் துல்லியமாகவும் மிக மிகப் பெரிய அளவிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியும் ஐரோப்பா பூராவிலும் பயங்கரமாய் அதிகரித்திருக்கும் வேலேயில்லாத் திண்டாட்டமும்—எக்கணமும் மூண்டுவிடும் நிலேயிலுள்ள தொழில் துறை நெருக்கடியைப் பற்றிக் கூறவே வேண்டாம், பல அறிகுறிகள் இதனேச் சுட்டிக்காட்டு

கின்றன—திருத்தல்வாதிகளுடைய அண்மைக் காலத்திய ''தத்துவங்கள்'' திருத்தல்வாதிகளிடையேகூட பலரும் அடங்கலாய் எல்லோராலும் மறக்கப்பட்டுவிடும் நிலையை உண்டாக்கியுள்ளன. ஆனால் அறிவுஜீவிகளின் இந்த நிலையின்மை தொழிலாளி வர்க்கத்துக்கு அளித்துள்ள படிப்பினைகள் ஒருபோதும் மறக்கப்படலாகாது.

மதிப்புத் தத்துவத்தைப் பொறுத்தமட்டில் பேம்பாவர்க்கின் பாணியில் சிறிதும் தெளிவற்ற சூசகங்களையும் பெருமூச்சுகளையும் தவிர்த்து திருத்தல்வாதிகள் வேறு எதுவுமே அளித்திடவில்லை, ஆகவே விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சியில் எவ்விதத் தடயமும் விட்டுச் செல்லவில்லை என்பதற்கு மேல் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

அரசியல் துறையில் திருத்தல்வாதமானது மார்க்சியத்தின் அடித்தளத்தை, அதாவது வர்க்கப் போராட்டப் போதனையைத் திருத்த மெய்யாகவே பெருமுயற்சி செய்தது. அரசியல் சுதந்திரமும் ஜனநாயகமும் அனைத்து மக்கள் வாக்குரிமையும் வர்க்கப் போராட்டத்துக்கான அடிநிலையை அகற்றிவிடுவதாகவும் தொழிலாளி வர்க்கத்துக்குத் தாய் நாடில்லை என்கிற கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் பழம்பெரும் நிர்ணயிப்பைப் பொய்யாக்கி விடுவதாகவும் கூறப்பட்டது. ஏனெனில் ''பெரும்பான்மையோரின் சித்தம்'' ஆதிக்கம் செலுத்துவதால், ஜனநாயகத்தில் அரசை வர்க்க ஆதிக்கத்திற்கான உறுப்பாய் யாரும் கருதலாகாதென்றும் பிற்போக்காளர்களுக்கு எதிராய் முற்போக்கான சமூக-சீர்திருத்தவாத முதலாளித்துவ வர்க்கத்தினருடன் கூட்டுகள் நிறுவிக் கொள்வதை நிராகரிக்கலாகாதென்றும் கூறினர்.

திருத்தல்வாதிகளுடைய இந்த வாதங்கள் ஓரளவு பாங்குற வகுக்கப்பெற்ற கருத்தமைப்பாகும் என்பதை, அதாவது பிரசித்தமான பழைய மிதவாத-முதலாளித்துவக் கருத்தமைப்பாகும் என்பதை மறுப்பதற்கில்லை. முதலாளித்துவ நாடாளுமன்ற முறையில் வாக்குரிமையையும் அரசாங்க விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமையையும் குடிமக்கள் அனைவரும் பாகுபாடின்றிப் பகிர்ந்து கொள்வதால் இது வர்க்கங்களையும் வர்க்கப் பிரிவினைகளையும் ஒழித்திடுகிறது என்று மிதவாதிகள் எப்பொழுதுமே கூறி வந்துள்ளனர். இத்தகைய கருத்துக்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்

பாவின் வரலாறு அனைத்தும் இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில் ருஷ்யப் புரட்சியின் வரலாறு அனைத்தும் கண்கூடாய்க் காட்டுகின்றன. ''ஜனநாயக'' முதலாளித்துவத்தின் சுதந்திரத்தில் பொருளாதாரப் பாகுபாடுகள் மேலும் தீவிரமாகிக் கடுமையாகின்றனவே ஒழிய குறைந்து விடவில்லை. மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளிலுங்கூட இக்குடியரசுகளும் வர்க்க ஒடுக்குமுறை அமைப்புகளே என்ற அவற்றின் உள்ளியல்பான தன்மையை நாடாளுமன்ற முறை அப்பட்டமாய்த் தெரியப்படுத்துகிறதேயன்றி அவற்றின் வர்க்க ஒடுக்குமுறையை அகற்றிவிடவில்லை. அரசியல் நிகழ்ச்சிகளில் முன்பு தீவிரமாகப் பங்குபெற்ற பகுதிகளைக் காட்டிலும் அளவிட முடியாத விரிவான மக்கள் பகுதியினருக்கு அறிவொளியூட்டி அவர்களை ஒழுங்கமைத்திடத் துணை புரிவதன் மூலம் நாடாளுமன்ற முறை நெருக்கடிகளையும் அரசியல் புரட்சிகளையும் அகற்றிவிடவில்லை, இப்புரட்சிகளின் போது உள்நாட்டுப் போர் அதிகபட்ச அளவுக்குக் கடுமையாகும்படியே செய்கிறது. இது தவிர்க்க முடியாதபடி எப்படி கடுமையாகிவிடுகிறது என்பதை 1871ம் ஆண்டு வசந்தத்தில் பாரிஸ் நிகழ்ச்சிகளும் 1905 குளிர்காலத்தில் ருஷ்ய நிகழ்ச்சிகளும்[10] மிக மிகத் தெளிவாய்க் காட்டின. பாட்டாளி வர்க்க இயக்கத்தை நசுக்கும் பொருட்டு பிரெஞ்சு முதலாளி வர்க்கம் ஒரு கணங்கூடத் தயங்காது தேசம் அனைத்துக்கும் எதிரான பகைவனுடன், பிரெஞ்சு நாட்டைச் சீரழியச் செய்த அன்னியச் சேனையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. நாடாளுமன்ற முறை, முதலாளித்துவ ஜனநாயகம் இவற்றின் தவிர்க்க இயலாத உள்ளார்ந்த இயக்கவியலை—வெகுஜனப் பலாத்காரத்தின் மூலம் சர்ச்சைக்கு முன்னிலும் கூர்மையான முடிவு காண வழி வகுக்கும் இதனை—புரிந்து கொள்ளாதவர்கள் இந்த நாடாளுமன்ற முறையின் அடிப்படையில் கோட்பாட்டு வழியில் முரணின்றியும் தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள் இந்தச் ''சர்ச்சைகளில்'' வெற்றிகரப் பங்கு கொள்ள மெய்யாகவே அவர்களைத் தயார் செய்யும் விதத்திலும் பிரசாரமும் கிளர்ச்சியும் நடத்த ஒருபோதும் முடியாது. மேற்கு நாடுகளில் சமூக-சீர்திருத்த மிதவாதிகளுடனும் ருஷ்யப் புரட்சியில் மிதவாதச் சீர்திருத்தவாதிகளுடனும் (காடேட்டுக்கள்[11]) செய்து கொள்ளப்பட்ட கூட்

டணிகள், ஒப்பந்தங்கள், இணைப்புகள் இவற்றின் அனுபவமானது வெகுஜனங்களுடைய உணர்வை மழுங்கடிக்கவே இந்த ஒப்பந்தங்கள் உதவுகின்றன, அவை போராடும் வீரர்களைச் சிறிதும் போராடும் ஆற்றலற்ற, மிகுந்த ஊசலாட்டமும் துரோகத் தன்மையும் கொண்டவர்களுடன் இணையச் செய்து, வெகுஜனங்களுடைய போராட்டத்தின் மெய்யான முக்கியத்துவத்தைப் பலவீனப்படுத்துகின்றனவே அன்றி அதனை உயர்த்தவில்லை என்பதை ஐயந்திரிபற நிரூபித்துக் காட்டியுள்ளது. பிரான்சில் மில்லிரான் போக்கு[12]—விரிவான, மெய்யாகவே நாடு தழுவிய அளவில் திருத்தல்வாத அரசியல் போர்த்தந்திரத்தைக் கையாளுவதில் நடத்திய மிகப் பெரிய பரிசோதனை இது—உலகெங்கணும் பாட்டாளி வர்க்கம் எந்நாளும் மறக்க முடியாத வகையில் திருத்தல்வாதம் குறித்து நடைமுறை வாயிலான ஒரு மதிப்பீட்டை அளித்திருக்கிறது.

சோஷலிச இயக்கத்தின் இறுதி நோக்கம் குறித்துத் திருத்தல்வாதம் அனுசரிக்கும் கண்ணோட்டம் அதன் பொருளாதார, அரசியல் போக்குகளுடன் பொருந்துகிற இயற்கையான நிரப்புக் கூறாகும். ''இயக்கமே யாவும், இறுதி நோக்கம் ஒரு பொருட்டல்ல''—பெர்ன்ஷ்டைனுடைய இந்த வசீகரச் சொற்றொடர் பல நீண்ட வியாக்கியானங்களைக் காட்டிலும் சிறப்பாய்த் திருத்தல்வாதத்தின் உட்பொருளைத் தெரிவிக்கிறது. தனது நடத்தையைச் சந்தர்ப்பத்துக்குச் சந்தர்ப்பம் மாற்றி நிர்ணயித்துக் கொள்ளுதல், அன்றன்றைக்குமான நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ப விவகார அரசியலின் திருப்பங்களுக்கும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கத்தின் தலையாய நலன்களையும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின், முதலாளித்துவப் பரிணாமம் அனைத்தின் அடிப்படைக் கூறுகளையும் மறந்துவிடுதல், இந்தத் தலையாய நலன்களை அந்தந்த தருணத்திற்குரிய மெய்யான அல்லது கற்பிதமான நலன்களுக்காகப் பலியிடுதல்—இவையேதான் திருத்தல்வாதத்தின் கொள்கை. இந்தக் கொள்கையின் தன்மையிலிருந்தே வெளிப்படையாய்ப் பெறப்படுவது என்னவெனில் இது எண்ணிலடங்காப் பல்வேறு வடிவங்களை ஏற்கும் என்பதும் ஓரளவுக்கோ பெருமளவுக்கோ ''புதுமையான'' ஒவ்வொரு பிரச்சினையும் நிகழ்ச்சிகளில் ஓரளவுக்கோ பெருமளவுக்கோ எதிர்பாராத,

முன்னறியாத ஒவ்வொரு திருப்பமும் — அடிப்படை வளர்ச்சித் திசையை அது மிகச் சொற்ப அளவுக்கு மட்டுமே தான், மிக மிகச் சொற்ப காலத்துக்கேதான் மாற்றுகிறது என்றாலுங்கூட—தவிர்க்க முடியாத வகையில் ஏதேனும் ஒரு வகைத் திருத்தல்வாதத்தை எப்பொழுதும் தோற்று விக்கவே செய்யும் என்பதுந்தான்.

திருத்தல்வாதம் தவிர்க்க முடியாததாய் இருப்பதற்குத் தற்கால சமுதாயத்தில் அதற்குள்ள வர்க்க வேர்கள்தான் காரணம். திருத்தல்வாதம் ஒரு சர்வதேசியப் புலப்பாடு. ஜெர்மனியில் வைதிகமான மார்க்சியவாதிகளுக்கும் பெர்ன் ஷ்டைனியர்களுக்கும்[13], பிரான்சில் கெட்டின் [Guesde] ஆதர வாளர்களுக்கும் ஜொரேஸ் ஆதரவாளர்களுக்கும்[14] (தற் போது இன்னும் முக்கியமாய் புரூஸ் ஆதரவாளர்களுக்கும்[15]), பிரிட்டனில் சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கும் சுயேச் சைத் தொழிற் கட்சிக்கும்[16], பெல்ஜியத்தில் புருக்கேருக் கும் வண்டர்வேல்டேக்கும், இத்தாலியில் முழுமையாளர் களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும்[17], ருஷ்யாவில் போல்ஷி விக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும்[18] இடையிலான உறவுநிலை இந்நாடுகள் யாவற்றின் தற்போதைய நிலையில் இருந்து வரும் மிகப் பல்வேறுப்பட்ட தேசிய நிலைமைகளை யும் வரலாற்றுக் கூறுகளையும் மீறி, சாராம்சத்தில் எங்கும் ஒன்றே போல் இருக்கிறது; சிறிதளவேனும் தகவல் தெரிந்த, சிந்தனை ஆற்றல் கொண்ட எந்த சோஷலிஸ்டுக் கும் இது குறித்துக் கடுகளவும் சந்தேகம் இருக்க முடியாது. உண்மையில் இன்றைய சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத் தினுள் நிலவும் ''பிரிவினை'' தற்போது உலகின் பல் வேறுநாடுகள் யாவற்றிலும் ஒரே விதமான வழியில்தான் போய்க் கொண்டிருக்கிறது. முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு நாடுகளிலும் பல்வேறுபட்ட போக்குகள் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கம் ஒன்றினுள் போராடிக் கொண்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் இன்றைய நிலைமை பிரம்மாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்ப தற்குச் சான்று கூறுகிறது. லத்தீனிய நாடுகளில் ''புரட்சிகர சிண்டிகல்வாதத்தாய்''[19] உருவாகியுள்ள அந்த ''இடது சாரி திருத்தல்வாதமுங்''கூடத் தன்னை மார்க்சியத்துக்குத் தகவமைத்து மார்க்சியத்தைத் ''திருத்தி வருகிறது'': இத்தாலியில் லப்ரியோலாவும் பிரான்சில் லாகர்டேலும்

தவருகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலையிலிருந்து சரியாய்ப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலைக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சந்தர்ப்பவாத திருத்தல்வாதத்தைப் போல அதே அளவுக்கு வளர்ச்சியடையாது இருந்து வரும் இந்தத் திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தை இங்கு நாம் பகுத்தாராய்வதற்கில்லை. இந்தத் திருத்தல்வாதம் இன்னமும் சர்வதேச நிகழ்ச்சிப் போக்கு ஆகவில்லை, எந்தவொரு நாட்டிலும் சோஷலிஸ்டுக் கட்சியுடன் இன்னமும் அது எந்தவொரு பெரிய நடைமுறைப் போராட்டத்தின் சோதனையையும் கண்டதில்லை. ஆகவே மேலே சித்திரிக்கப்பட்ட ''வலதுசாரி திருத்தல்வாதத்தைப்'' பரிசீலிப்பதுடன் நாம் நிறுத்திக் கொள்கிருேம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாததாய் இருப்பதன் மூலகாரணம் என்ன? தேசியத் தனி இயல்புகளிலும் முதலாளித்துவ வளர்ச்சியின் அளவுகளிலும் இருக்கும் வேறுபாடுகளைக் காட்டிலும் இது ஆழமுடையதாய் இருப்பது ஏன்? ஏனெனில் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்துடன் கூடவே விரிவான சிறு முதலாளித்துவப் பகுதியினர், சிறு உடைமையாளர்கள் எப்பொழுதுமே இருந்து வருகிருர்கள். முதலாளித்துவம் சிற்றளவான உற்பத்தியிலிருந்துதான் தோன்றியது, இடையருது தோன்றிக் கொண்டும் இருக்கிறது. முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி மீண்டும் மீண்டும் பல புதிய ''மத்திய தரப் பகுதிகளை'' (ஆலைகளை அண்டிப் பிழைக்கும் தொழிலகங்கள், வீட்டுப் பணித்துறை, சைக்கிள், மோட்டார் தொழில்களைப் போன்ற பெருந் தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடெங்கிலும் சிதறிக் கிடக்கும் சிறு தொழிலகங்கள், இன்ன பிற) தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் புதிய சிறு உற்பத்தியாளர்கள் இதே போலத் தவிர்க்க முடியாதபடி திரும்பவும் பாட்டாளி வர்க்க அணிகளுக்குத் தள்ளப்பட்டு விடுகிருர்கள். விரிவான தொழிலாளர் கட்சிகளின் அணிகளில் குட்டி முதலாளித்துவ உலகக் கண்ணேட்டம் திரும்பத் திரும்பத் தலைதூக்குவது இயற்கையே. பாட்டாளி வர்க்கப் புரட்சியால் கதி மாற்றங்கள் ஏற்படுகின்ற வரையில் இது இப்படியேதான் இருக்கும், இருக்க வேண்டும் என்பது இயற்கையே. ஏனெனில் இத்

தகைய ஒரு புரட்சியை உண்டாக்க மக்கள் தொகையில் பெருவாரியானோர் ''அறவே'' பாட்டாளி வர்க்கத்தவராக்கப் படுவது அவசியமென நினைப்பது மிக மிகப் பெரும் தவறாகும். இப்பொழுது அடிக்கடி நாம் சித்தாந்தத் துறையில் மட்டும் அனுபவித்து வருகின்றவை, அதாவது மார்க்சுக்குத் தத்துவார்த்தத் திருத்தங்கள் செய்வது குறித்த சர்ச்சைகளை—நடைமுறையில் தற்போது தொழிலாளர் இயக்கத்தின் தனிப்பட்ட துணைப் பிரச்சினைகள் குறித்து மட்டும் திருத்தல்வாதிகளுடனான போர்த்தந்திரக் கருத்து வேறுபாடுகளாகவும் அவற்றின் அடிப்படையிலான பிளவுகளாகவும் தலைதூக்குகிறவை—பாட்டாளி வர்க்கப் புரட்சியானது சர்ச்சைக்குரிய எல்லாப் பிரச்சினைகளையும் கூர்மையாக்கிவிடும் போதும், வெகுஜனங்களின் நடத்தையை நிர்ணயிப்பதில் மிகுந்த உடனடி முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் பற்றிய எல்லாக் கருத்து வேறுபாடுகளையும் ஒன்றுகுவியச் செய்யும் போதும், மும்முரமான போராட்டத்துக்கிடையில் நண்பர்களிடமிருந்து பகைவர்களை இனங்கண்டு கொள்வதையும் முடிவு கட்டும்படியான விதத்தில் பகைவனுக்கு அடி கொடுக்கும் பொருட்டு மோசமான கூட்டாளிகளை விலக்கித் தள்ளுவதையும் அவசியமாக்கிவிடும் போதும் ஒப்பிட முடியாத மிகப் பெரிய அளவிலே வருங் காலத்தில் தொழிலாளி வர்க்கம் நிச்சயம் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் திருத்தல்வாதத்தை எதிர்த்துப் புரட்சிகர மார்க்சியம் நடத்தும் சித்தாந்தப் போராட்டமானது, குட்டி முதலாளித்துவப் பகுதியினரின் எல்லா ஊசலாட்டங்களையும் பலவீனங்களையும் மீறித் தனது இலட்சியத்தின் முழு வெற்றியை நோக்கி முன்னேறி வீறு நடைபோடும் பாட்டாளி வர்க்கத்தினுடைய மாபெரும் புரட்சிப் போர்களின் பீடிகையே ஆகும்.

*1908 மார்ச் பிற்பாதியில்—*
*ஏப்ரல் 3 (16)க்குப் பிற்படாமல்*
*எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
தொகுதி 17,
பக்கங்கள் 15-26

## பதிப்பாளர் குறிப்புகள்

1 இடதுசாரி ஹெகல்வாதிகள் அல்லது இளம் ஹெகல்வாதிகள்—ஜெர்மனியிலிருந்த கருத்துமுதல்வாதத் தத்துவ ஞானப் போக்காகிய ஹெகலியன் பள்ளியின் இடதுசாரி பிரதிநிதிகள்.

இளம் ஹெகல்வாதிகள் சமுதாய வளர்ச்சியின் புறவய விதிகளேயும், சமுதாயத்தின் வளர்ச்சியில் பொருளுற்பத்தியின் பங்கையும், அதில் வர்க்கப் போராட்டத்தின் தவிர்க்க இயலாத் தன்மையையும் அங்கீகரிக்கவில்லே. அவர்கள் 19 நூற்ருண்டின் 30ம், 40ம் ஆண்டுகளிலிருந்த ஜெர்மானிய பூர்ஷ்வா மிதவாதத்தின் சித்தாந்தங்களேப் பிரதிபலித்தனர். அவர்களது நடவடிக்கை அனைத்தும் புரட்சிகர வாக்கியங்களிலும், ஆதிக்க வர்க்கத்தினரின் பாலான மிரட்டல்களிலும், அவர்களுடன் உடன்பாடு செய்து கொள்வதிலும்தான் அடங்கியிருந்தது.—7.

2 புரூதோனியம்—விஞ்ஞானத் தன்மை அற்ற, மார்க்சியத்துக்கு முரணுன குட்டி முதலாளித்துவ சோஷலிசத்தில் ஒரு போக்கு. பிரெஞ்சு அராஜகவாதியான பியேர் ஜோசேப் புரூதோன் இதன் சித்தாந்தவாதி. பெரிய முதலாளித்துவ உடைமைகளேக் குட்டி முதலாளித்துவ நிலேயில் நின்று அவர் விமர்சனம் செய்தார். சின்னஞ் சிறு தனியுடைமையாளர்களே என்றும் நிலேத்து நீடிக்கச் செய்யலாம் என்று கனவு கண்டார். பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை அவர் புரிந்து கொள்ளவில்லே. வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் அவர் எதிர்த்தார். அராஜகவாதி என்ற முறையில் அரசே தேவை இல்லே என்ருர்.

முதலாவது அகிலத்தின் மீது தமது கருத்துக்களைத் திணிக்க முயன்ற புரூதோனியவாதிகளை எதிர்த்து மார்க்சும் எங்கெல்சும் இடைவிடாது போராடினர்.—7.

3 **பக்கூனிஸ்டுக்கள்**—அராஜகவாதத்தின் சித்தாந்தவாதியாகிய மி. அ. பக்கூனின் பெயரைத் தாங்கியிருந்த ஒரு போக்கின் ஆதரவாளர்கள். பக்கூனிஸ்டுக்கள் மார்க்சிய தத்துவத்திற்கெதிராகவும், தொழிலாளர் இயக்கத்தின் போர்த்தந்திரத்திற்கெதிராகவும் போரிட்டனர். பக்கூனின்வாதத்தின் அடிப்படைக் கருத்துநிலை எந்த ஒரு அரசையும்,பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் மறுப்பதும்,பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாததும் ஆகும். பக்கூனிஸ்டுக்களின் கருத்துப்படி இரகசிய புரட்சி சங்கம் மக்கள் கலகங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்; இவை உடனடியாக அரசை நீக்குவதற்கு இட்டுச் செல்லும். சதியாலோசனை, கலகங்கள், வன்முறை ஆகியவற்றைக் கொண்ட அவர்களது நடைமுறைத் தந்திரம் முரட்டுத் துணிவு கொண்ட தன்மையுடையதாகவும் கிளர்ச்சியைப் பற்றிய மார்க்சியப் போதனைக்கு விரோதமாகவும் இருந்தது.

பக்கூனின் முதலாவது அகிலத்தினுள் உட்புகுந்து இந்த அமைப்பின் தலைமையைக் கைபற்றுவதை தனது குறிக்கோளாக வைத்தார், எதையும் செய்யத் தயங்காது மார்க்சிற்கு எதிராகப் போரிட்டார். 1872ம் ஆண்டு ஹேக் காங்கிரசில், சீர்குலைவு நடவடிக்கைக்காக பக்கூனின் முதலாவது அகிலத்திலிருந்து விலக்கப்பட்டார்.

**முதலாவது அகிலம் (சர்வதேசத் தொழிலாளர் சங்கம்)**—கார்ல் மார்க்ஸ் நிறுவிய முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வதேச அமைப்பு (1864—1876).

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் அரசியல் போராட்டத்தை நடத்தி அவர்களுடைய சர்வதேச ஒற்றுமையை வலுப்படுத்தி கொண்டிருந்தது. மார்க்சியத்தைப் பரப்புவதிலும் சோஷலிஸப் போதனையைத் தொழிலாளர் இயக்கத்தோடு சேர்ப்பதிலும் முதலாவது அகிலத்தின் பாத்திரம் முக்கியமானதாக இருந்தது.—7.

4 **நேர்காட்சிவாதம்**—இது ஒரு தத்துவஞானப் போக்காக பிரான்சில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் 30ம் ஆண்டுகளில் தோன்றியது. இதன் ஸ்தாபகர் ஒகுஸ்ட் கொன்த் நேர்காட்சிவாதத்தை விஞ்ஞான பூர்வமான அறிதலுடன் ஒன்ருக்கிஞர்; இதன் முக்கியக் குறிக்கோள் நேரடியாகப் பார்த்ததன் முடிவுகளைப் புறவய

மர்க் சித்தரித்தல். பொருள்முதல்வாதமாகவோ அல்லது கருத்துமுதல்வாதமாகவோ இல்லாமல், இரண்டிற்கும் ''மேலே'' நேர்காட்சிவாதம் நிற்பதாக நிரூபிக்க கொன்த் முயன்றார். நேர்காட்சிவாதத்திற்கு உரிய இந்த அம்சத்தைக் கருத்தில் கொண்டுதான் லெனின் பின்வருமாறு எழுதினார்: ''...இது ஒரு வருந்தத்தக்க கதம்பம், தத்துவஞானத்தில் மத்தியத்துவத்தின் வெறுக்கத்தக்க அம்சம், ஒவ்வொரு குறிப்பிட்ட பிரச்சினையிலும் பொருள்முதல்வாத, கருத்துமுதல்வாத திசைகளைக் குழப்பக் கூடியது''.—7.

5 **பெர்ன்ஷ்டைன்வாதம்** பற்றி—சர்வதேச சமூக-ஜனநாயகத்தில் தோன்றிய சந்தர்ப்பவாத, மார்க்சியத்திற்கு பகைமையான போக்கு; பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனியில் தோன்றிய இப்போக்கிற்கு திருத்தல்வாதத்தின் மிக வெளிப்படையான ஆதரவாளனாகிய எ. பெர்ன்ஷ்டைனின் பெயர் இடப்பட்டுள்ளது.

பெர்ன்ஷ்டைன் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய மார்க்சிய தத்துவத்தையும், முதலாளித்துவ தோல்வியின் தவிர்க்க இயலாத் தன்மை, சோஷலிசப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றைப் பற்றிய போதனைகளையும் மறுத்தார். முதலாளித்துவத்தில் தொழிலாளர்களின் பொருளாதார நிலைமைகளை ''மேம்படுத்துவதை'' நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை பெர்ன்ஷ்டைன் தொழிலாளர் இயக்கத்தின் ஒரே ஒரு கடமையாக அறிவித்தார்; ''இயக்கமே யாவும், இறுதி நோக்கம் ஒரு பொருட்டல்ல'' என்னும் சந்தர்ப்பவாத சூத்திரத்தை முன்வைத்தார். பெர்ன்ஷ்டைன் மற்றும் அவரது ஆதரவாளர்களின் தத்துவார்த்தக் கருத்துக்களும், நடைமுறை ரீதியான சந்தர்ப்பவாத நடவடிக்கையும் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு நேரடியாகத் துரோகம் இழைப்பதில் கொண்டுவிட்டன.—8.

6 **சமூக-நரோத்னிக்குகள்** — இங்கே சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் வெவ்வேறு நரோதியவாத குழுக்களும் கோஷ்டிகளும் ஒன்றுசேர்ந்ததன் விளைவாக நிறுவப்பட்டது.

இந்தக் குட்டி முதலாளித்துவ கட்சியின் உறுப்பினர்கள் நிலத்தில் தனி உடைமை ஒழிக்கப்பட வேண்டு

மென்றும் சமத்துவ நிலவுரிமை கோட்பாடுகளின் அடிப்படையில் உபயோகித்துக் கொள்ளப்படுவதற்காக நிலங்கள் கிராமச் சமுதாயங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும் கோரினர். அவர்கள் தமக்குச் சூட்டிக் கொண்ட பெயர் எப்படி இருப்பினும், அவர்களுடைய வேலைத்திட்டத்தில் சோஷலிஸ்டு அடக்கம் எதுவும் இருக்கவில்லை. அவர்களுடைய திட்டத்தை நிறைவேற்றுவது சோஷலிசத்திற்கு மாறுவதல்ல என்று லெனின் சுட்டிகாட்டினூர். ஏனென்ருல் நிலத்தில் தனி உடைமையை ஒழித்திடுவதால் மட்டும் ''மூலதனத்தின் ஆதிக்கத்தையும் மக்கள் திரளினரின் ஏழ்மையையும் அகற்றிவிட முடியாது'' (நூல் திரட்டு, தொகுதி 12, பக்கம் 96, ருஷ்ய மொழியில்).

புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய போதனையையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் நிராகரித்தனர். தனிநபர் பயங்கரவாதச் செயல்களை அடிப்படையாக கொண்ட அவர்களுடைய போர்த்தந்திரம் தொழிலாளர் இயக்கத்திற்குத் தீங்கிழைத்து கொண்டிருந்தது.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மென்ஷிவிக்குகளுடன் (18ம் குறிப்பைப் பார்க்க) சேர்ந்து எதிர்ப்புரட்சி பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். இக்கட்சியின் தலைவர்கள் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாய் இருந்தனர். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்பு சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடினர்.—9.

7 **நவீன கான்ட்டியவாதம்**—முதலாளித்துவத் தத்துவஞானத்திலுள்ள பிற்போக்குப் பிரிவு. இது 19ம் நூற்ருண்டின் நடுவில் ஜெர்மனியில் தோன்றியது. கான்ட்டின் தத்துவஞானத்தில் மிகவும் பிற்போக்கானவையாக இருந்த கருத்துமுதல்வாதக் கூறுகளைக் ''கான்ட்டுக்குத் திரும்பு'' என்பதாய் முழங்கி நவீன கான்ட்டியவாதிகள் உயிர்ப்பிக்க முயன்றனர், வரலாற்று மற்றும் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை எதிர்த்தனர்.—9.

8 ''மூலதனம்'' நூலின் முதல் தொகுதியின் இரண்டாம் பதிப்பிற்கு கார்ல் மார்க்ஸ் எழுதிய பின்னுரையைப் பார்க்க.—9.

9 *வி. இ. லெனின் விரைவிலேயே ''பொருள்முதல்வாத மும் அனுபவவாத விமர்சனமும்'' எனும் நூலை எழு தினார், இது 1909ம் ஆண்டு மே மாதம் வெளியிடப் பட்டது. அதில் லெனின் பக்தானவையும், மற்ற திருத்தல்வாதிகளையும் அவர்களது தத்துவஞான ஆசான்களாகிய அவினாரியுஸ், மாஹ் ஆகியோரையும் கடுமையாக விமரிசித்தார்.—11.*

10 *1871ம் ஆண்டு மார்ச்சில் பாரிசில் பாட்டாளிகளின் எழுச்சியும் 1905ம் ஆண்டு டிசம்பரில் மாஸ்கோ தொழிலாளர்களின் ஆயுதந்தாங்கிய எழுச்சியும் குறிப் பிடப்படுகின்றன.—15.*

11 **அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சி** *(காடேட்டுக்கள்)—ருஷ்யா விலிருந்த மிதவாத-முடியாட்சி முதலாளி வர்க்கத்தின் முக்கியக் கட்சி, 1905ம் ஆண்டு அக்டோபரில் தோற்றுவிக்கப்பட்டது; இதில் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளும் நிலச்சுவாந்தார்களும் பூர்ஷ்வா அறிவு ஜீவிகளும் இடம் பெற்றிருந்தனர். உழைப்பாளி வெகுஜனங்களை ஏமாற்றுவதற்காக காடேட்டுக்கள் ''மக்கள் விடுதலைக் கட்சி'' எனும் பொய்ப் பெயரையும் சூட்டிக் கொண்டனர், உண்மையில் அவர்கள் அரசியல் சட்ட முடியாட்சி கோரிக்கைக்கு அப்பால் செல்ல வில்லை. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் காடேட்டுக்கள் சோவியத் ஆட்சியின் சமரசப் படுத்த இயலாத பகைவர்களாக செயல்பட்டனர், எல்லா ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சி நடவடிக்கை களிலும் ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதல்களிலும் பங்கேற்றனர். ஆக்கிரமிப்பாளர்களும் வெண்படை யினரும் முறியடிக்கப்பட்ட பின்னரும் கூட, நாட்டை விட்டு வெளியேறிய காடேட்டுக்கள் தங்களது சோவி யத் விரோத எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை நிறுத்த வில்லை.—15.*

12 **மில்லிரான் போக்கு** *— பிரெஞ்சு சோஷலிஸ்டு-சீர்திருத்த வாதி மில்லிரான் பெயரைப் பெற்ற சமூக-ஜனநாயக வாதத்தில் சந்தர்ப்பவாதப் போக்கு. 1899ல் மில்லி ரான் பிரெஞ்சுப் பிற்போக்கு முதலாளித்துவ அர சாங்கத்தில் சேர்ந்து கொண்டு அதன் மக்களுக்குப் பகைமையான கொள்கையைச் செயல்படுத்த உதவி னார்.*

*இது திருத்தல்வாதமும் துரோகமும் ஆகும் என்றும் சமூக-சீர்திருத்தவாதிகள் முதலாளித்துவ அரசாங்கத் தில் சேர்ந்ததன் மூலமாக முதலாளி வர்க்கத்தினரின்*

மறைவுத்திரையாகச் செயல்பட்டனர் என்றும் அவர்களின் துணை கொண்டு அவ்வரசாங்கம் மக்களை ஏமாற்றியது என்றும் லெனின் குறிப்பிட்டார்.—16.

13 **வைதிகமான மார்க்சியவாதிகள்**—மார்க்சியத்தை திருத்துவதற்கெதிராகப் போராடிய ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகள்.

**பெர்ன்ஷ்டைன்வாதத்தைப்** பற்றி — 5வது குறிப்பைப் பார்க்க.—17.

14 **கெட்டின் ஆதரவாளர்கள்** — 19ம் நூற்றுண்டின் இறுதியிலும் 20ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் ழூல் கெட்டு, போல் லஃபார்க் ஆகியோர் தலைமையில் செயல்பட்ட புரட்சிகர மார்க்சியப் போக்கு. 1901ல் ழூல் கெட்டு தலைமை தாங்கிய புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் ஆதரவாளர்கள் பிரான்சின் சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர் (இக்கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் தலைவருடைய பெயரில் கெட்டுவாதிகள் என்று அழைக்கப்பட்டனர்). 1905ல் கெட்டுவாதிகள் சீர்திருத்தவாத வழிப்பட்ட பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் ஒன்றுப்பட்டனர்.

**ஜொரேஸ் ஆதரவாளர்கள்** — பிரெஞ்சு சோஷலிஸ்டு ழான் ஜொரேசின் ஆதரவாளர்கள். ழான் ஜொரெஸ் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தின் வலதுசாரி, சீர்திருத்தவாதப் பிரிவுக்குத் தலைமை தாங்கினுர். ஜொரேஸ்வாதிகள் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று கோரினுர்கள், பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று உபதேசித்தார்கள். 1902ல் அவர்கள் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர்; இக்கட்சி சீர்திருத்தவாதப் போக்கைக் கடைப்பிடித்தது.—17.

15 **புரூஸ் ஆதரவாளர்கள்** (பா. புரூஸ், பி. மலோன் முதலானேர்) **அல்லது சாத்தியப்பாடுவாதிகள்** — பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் 19ம் நூற்றுண்டின் 80ம் ஆண்டுகளில் தோன்றிய குட்டி முதலாளித்துவ, சீர்திருத்தவாதப் போக்கு. இவர்கள் தொழிலாளர் சமுதாயப் புரட்சிக் கட்சி என்பதாய் ஒன்றை அமைத்துக் கொண்டனர். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் மறுத்தனர், தொழிலாளர் இயக்கத்தின் சோஷலிஸ்டுக் குறிக்கோள்களை மூடிமறைத்தனர், தொழிலாளர் போராட்டத்தை எது சாத்தியமோ

அந்த வரம்புக்குள் இருக்கச் செய்ய வேண்டும் என்றனர். இதிலிருந்து அவர்கள் சாத்தியப்பாடுவாதிகள் என்று பெயர் பெறலாயினர்.

சாத்தியப்பாடுவாதிகளில் பெரும்பாலோர் ழான் ழொரேசின் தலைமையில் *1902*ல் துவக்கப்பட்ட சீர்திருத்தவாத பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டனர்.—*17*.

16 பிரிட்டிஷ் **சமூக-ஜனநாயகச் சம்மேளனம்** (The Social-Democratic Federation) *1884*ல் நிறுவப்பட்டது. சீர்திருத்தவாதிகளும் அராஜகவாதிகளும் மற்றும் ஆங்கில சோஷலிஸ்டு இயக்கத்தின் இடதுசாரிப் பிரிவினராகிய புரட்சிகரச் சமூக-ஜனநாயகவாதிகளும் மார்க்சியத்தின் ஆதரவாளர்களும் இதில் இருந்தனர். இச்சம்மேளனத்தின் வறட்டுத் தத்துவவாதத்தையும் குறுங்குழுவாதத்தையும் எங்கெல்ஸ் கண்டித்து இது பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்திலிருந்து பிரிந்து நிற்பதற்காகவும், தொழிலாளர் இயக்கத்தின் சிறப்பு இயல்புகளைப் புரிந்து கொள்ள முடியாதிருப்பதற்காகவும் இதை விமர்சித்தார். சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கு *1907*ல் சமூக-ஜனநாயகக் கட்சி என்று பெயரிடப்பட்டது. இக்கட்சி சுயேச்சைத் தொழிற் கட்சியின் இடதுசாரிக் கூறுகளுடன் சேர்ந்து *1911*ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி ஆயிற்று. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்படுவதற்கு *1920*ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு ஒற்றுமைக் குழுவும் முக்கியப் பங்காற்றின.

பிரிட்டிஷ் **சுயேச்சைத் தொழிற் கட்சி** (The Independent Labour Party)—*1893*ல் துவக்கப்பட்ட சீர்திருத்தவாதக் கட்சியாகும். இக்கட்சியின் தலைவர்கள்: கெய்ர் கார்டியும் மாக்டொனால்டுமாவர்.

தொடக்கத்திலிருந்தே அது முதலாளித்துவச் சீர்திருத்தவாதக் கொள்கையைப் பின்பற்றியது, நாடாளுமன்றப் போராட்ட முறையிலும் மிதவாதக் கட்சியுடனை நாடாளுமன்ற உடன்பாடுகளிலுமே பிரதான கவனம் செலுத்தி வந்தது. ''நடைமுறையில் இது எப்போதுமே முதலாளி வர்க்கத்தை சார்ந்திருக்கக் கூடிய சந்தர்ப்பவாதக் கட்சியாகும்,'' அது ''சோஷலிசத்தை மட்டும்தான் 'சார்ந்திராமல்' இருக்கிறதே தவிர மிதவாதத்தை மிகவும் சார்ந்திருக்கிறது'' என்று சுயேச்சைத் தொழிற் கட்சியைப் பற்றி வி. இ. லெனின் எழுதினார் (நூல் திரட்டு, தொகுதி *39*, பக்கம் *90*; தொகுதி *22*, பக்கம் *122*, ருஷ்ய மொழியில்).—*17*.

17 முழுமையாளர்கள் — ஒரு வகைக் குட்டி முதலாளித்துவ சோஷலிசமான ''முழுமையான'' சோஷலிசம் என்பதன் ஆதரவாளர்கள். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியில் மையவாதப் போக்கினராய் இருந்த இவர்கள் இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் சில பிரச்சினைகளில் சீர்திருத்தவாதிகளை எதிர்த்துப் போராடினர். இந்தச் சீர்திருத்தவாதிகள் கடைகோடியான சந்தர்ப்பவாத நிலையை அனுசரித்தனர்.—17.

18 மென்ஷிவிக்குகள் — ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903ல்) மத்திய அமைப்புக்களுக்காக நடந்த தேர்தல்களில் லெனின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற்றனர். இவர்கள் போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர். சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையினராகி மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்று பெயர் பெற்றனர்.

மென்ஷிவிக்குகள் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினருடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்றனர். 1917ல் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் மென்ஷிவிக்குகள் பங்கு கொண்டனர். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்பு மற்ற எதிர்ப்புரட்சி கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடினர்.—17.

19 ''புரட்சிகர சிண்டிகல்வாதம்''—19ம் நூற்றுண்டின் இறுதியில் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தோன்றிய குட்டி முதலாளித்துவ, அரை அராஜகவாதப் போக்கு.

அதன் ஆதரவாளர்கள் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் தேவையை மறுத்தனர்; கட்சியின் தலைமை பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் நிராகரித்தனர். புரட்சி இல்லாமலே தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களது பொது வேலைநிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவத்தை வீழ்த்திவிடலாம், பொருளாதாரத்தைத் தமது பிடிக்குள் கொண்டுவந்துவிடலாமென்று அவர்கள் கருதினர். ''பெரும்பான்மையான நாடுகளில் புரட்சிகர சிண்டிகல்வாதம், சந்தர்ப்பவாதம், சீர்திருத்தவாம், நாடாளுமன்ற மூடத்தனம் ஆகியவற்றின் நேரடியான, தவிர்க்க இயலாத விளைவாக அமைந்தது'' என்று லெனின் சுட்டிக் காட்டினர். (நூல் திரட்டு, தொகுதி 16, பக்கங்கள் 188-189, ருஷ்ய மொழியில்).—17.

## பெயர்க் குறிப்பகராதி

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)*—*விஞ்ஞான கம்யூனிசம், இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகியவற்றின் ஸ்தாபகர்களில் ஒருவர், கார்ல் மார்க்சின் நண்பர், சகதோழர்; சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் தலைவன், ஆசான்.—17.*

கான்ட் [Kant], இம்மனுயேல் *(1724—1804)*—*மூலச் சிறப்புடைய ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவ வியலின் மூலவர்.—6, 9.*

கெட்டு [Guesde], ழூல் *(1845—1922)—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம் மற்றும் இரண்டாவது அகிலத்தின் நிறுவகர்கள், தலைவர்களில் ஒருவர்.—17.*

டூரிங் [Dühring], ஒய்கேன் *(1833 — 1921) — ஜெர்மானிய தத்துவஞானி, பொருளாதார வல்லுநர். டூரிங்கின் தத்துவஞானக் கருத்துக்கள் நேர்காட்சிவாதம், இயக்க மறுப்பியல் பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகியவற்றின் கதம்பமாக இருந்தன. ஜெர்மானிய சமூக-ஜனநாயகத்தின் ஒரு பிரிவினரிடையே ஆதரவைப் பெற்ற டூரிங்கின் கருத்துக்கள், எங்கெல்ஸ் எழுதிய ''டூரிங்குக்கு மறுப்பு. திரு ஒய்கேன் டூரிங் விஞ்ஞானத்தில் நிகழ்த்திய புரட்சி'' என்னும் புத்தகத்தில் விமர்சனம் செய்யப்பட்டன.—6, 7, 11.*

பக்கூனின், மிஹயீல் அலெக்சாந்தரவிச் *(1814—1876)—ருஷ்யப் புரட்சியாளர், அராஜகவாதத்தின் சித்தாந்தவாதி. முதலாவது அகிலத்தின் உறுப்பினர், அதில் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் எதிரான பிளவு நடவடிக்கைகளை நிறைவேற்றினர். மார்க்சும் எங்கெல்*

*சும் பக்கூனின் பிற்போக்குக் கொள்கையை உறுதியாக எதிர்த்தார்கள். 1872ல் அவர் அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.—6, 7.*

**பக்தானவ் அ. (மலினேவ்ஸ்கி அலெக்சாந்தர் அலெக்சாந்தரவிச்)** *(1873 — 1928) — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, தத்துவவியலாளர், பொருளியலாளர், சமூகவியலாளர். தத்துவவியலாளர் என்ற முறையில் தமது சொந்த ''அனுபவவாத ஒருமைவாத'' முறையினை உருவாக்க முயன்றார். இது உள்ளபடியே அகநிலை கருத்துமுதல்வாதத் தத்துவவியலின் ஒரு வகையே.—10.*

**பஸாரவ் வி. (ருத்னெவ், விளதீமிர் அலெக்சாந்தரவிச்)** *(1874—1939) — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, தத்துவஞானி; கருத்துமுதல்வாத நிலையிலிருந்து மார்க்சியத்தைத் திருத்த முயன்றார். லெனின் இவரையும், பக்தானவையும் ''நவீன ஹியூமிய, நவீன பெர்க்லிய திருத்தல்வாதிகள்'' என அழைக்கிறார், ஏனெனில் தத்துவஞானத்தில் இவர்களது கருத்துக்கள் சாராம்ச ரீதியாக 18ம் நூற்றாண்டின் ஆங்கில தத்துவஞானிகள் பெர்க்லி, ஹியூம் ஆகியோரின் அகவய கருத்துமுதல்வாதத்தைப் புதுப்பித்தன.—10.*

**பிளெஹானவ், கியோர்கி வலென்தீனவிச்** *(1856—1918)—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி. ருஷ்யாவில் முதன் முதலில் மார்க்சியத்தைப் பரப்பியவர். ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு (1903) சந்தர்ப்பவாதத்துடன் இணக்கவாத நிலையை அனுசரித்தார். பிற்பாடு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார்.*

*அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின்பால் எதிர்மறைப் போக்கை மேற்கொண்டார். ஆனால் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் சேரவில்லை.—10.*

**புருக்கேர் [Brouckère], லுயீ தெ** *(1870 — 1951)—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர்களிலும் தத்துவாசிரியர்களிலும் ஒருவர். முதலாவது உலகப் போருக்கு முன்பு பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் இடதுசாரி பிரிவின் தலைவராக இருந்தார்.—17.*

**புருதோன் [Proudhon], பியேர் ஜோசப்** *(1809—1865)—பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர், பொருளியலாளர், சமூகவியலாளர்; அராஜகவாதத்திற்கு அடிகோலியவர்களில் ஒருவர். (2வது குறிப்பைப் பார்க்கவும்.)—7.*

பெர்க்லி [Berkeley], ஜார்ஜ் *(1685 — 1753)*—ஆங்கிலேயத் *தத்துவவியலாளர், அகநிலைக் கருத்துமுதல்வாதி. —11.*

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்டு *(1850 — 1932) —ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் படுமோசமான சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர். திருத்தல்வாதம், சீர்திருத்தவாதம் ஆகிய வற்றின் தத்துவவாதி. (5வது குறிப்பைப் பார்க்க வும்.)—8, 16.*

பேம்-பாவர்க் [Böhm-Bawerk], ஒய்கென் *(1851 — 1914) —பொருளியலாளர், அரசியல் பொருளாதாரத்தில் ஆஸ்திரியக் கொள்கைக் குழுவின் பிரதிநிதி, பொரு ளாதார விதிகளை அகநிலை கருத்துமுதல்வாத விளக் கம் செய்து மார்க்சியக் கருத்துக்களை எதிர்க்க முயன்றார்.—6, 11, 14.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)*—விஞ்ஞான *கம்யூனிசம், இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம், விஞ்ஞான அரசியல் பொருளா தாரம் ஆகியவற்றின் ஸ்தாபகர்; சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் தலைவர், ஆசான்.—6-13, 18.*

மில்லிரான் [Millerand], அலெக்சாந்தர் எத்தியேன் *(1859—1943)*—பிரெஞ்சு அரசியல்வாதி. 1890ம் ஆண்டு *களில் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் சேர்ந்தார். சந்தர்ப்பவாதப் போக்கிற்குத் தலைமை தாங்கினார். 1899ல் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் பதவி வகித்தார்.—6, 16.*

முல்பெர்கர் [Mülberger], அர்த்தூர் *(1847—1907)— ஜெர்மன் குட்டி முதலாளித்துவ கட்டுரையாளர் மருத்துவர், புரூதோனைப் பின்பற்றியவர். மார்க்சியத்தை விமர்சனம் செய்தார்.—6, 7.*

லப்ரியோலா [Labriola], அர்த்தூரோ *(1873 — 1959) —இத்தாலிய அரசியல்வாதி, வழக்குரைஞர், பொரு ளியலாளர், சிண்டிகல்வாதத்தின் தத்துவாசிரியர், சிண் டிகல்வாதத் தத்துவம் பற்றிய பல நூல்களின் ஆசி ரியர். தமது ''புரட்சிகர சிண்டிகல்வாத'' வேலைத் திட்டத்தை, மார்க்சியத்தை ''மேம்படுத்தி'' ''திருத் தம்'' செய்வது மூலம் மார்க்சியத்தோடு பொருத்த முயன்றார்.—6, 17.*

லாகர்டேல் [Lagardelle], யுபேர் *(1874—1958)*—*பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட அரசியல்வாதி, அராஜக-சிண்டிகல்வாதி. அராஜக-சிண்டிகல் வாதம் பற்றிய பல நூல்களின் ஆசிரியர்.—6, 17.*

வண்டர்வேல்டே [Vandervelde], எமீல் *(1866—1938)*—*பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர், இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் சேர்மன்; தீவிரமான சந்தர்ப்பவாத நிலையை மேற்கோண்டார்.—6, 17.*

ழொரேஸ் [Jaurès[, ழான் *(1859—1914)*—*பிரெஞ்சு, சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தின் செல்வாக்குள்ள பிரமுகர், வரலாற்ருசிரியர். பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர். ஜனநாயகம், மக்களுக்கான சுதந்திரங்கள், சமாதானம் ஆகியவற்றை ஆதரித்துப் போராடினர், ஏகாதிபத்திய அடிமை முறையையும் நாடுபிடிக்கும் போர்களையும் எதிர்த்தார். உலக ஏகாதிபத்தியப் போருக்குச் சற்று முன்பு பிற்போக்குவாதிகளின் கையாள் ஒருவனுல் ழொரேஸ் படுகொலை செய்யப்பட்டார்.—6, 17.*

ஹியூம் [Hume], டேவிட் *(1711—1776)*—*ஆங்கிலேயத் தத்துவவியலாளர், அகநிலை கருத்துமுதல்வாதி.—6, 11.*

ஹெகல் [Hegel], கியோர்கு வில்ஹெல்ம் பிரெடெரிக் *(1770—1831)*—*மாபெரும் ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி. கருத்துமுதல்வாத இயக்கவியலை மிகவிரிவான, ஆழமான முறையில் அவர் செப்பம் செய்தார்.—6, 9.*

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

## விற்பனையாளர்கள்

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

#### தலைமை அலுவலகம்

*41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.*

#### ஷோ-ரூம்

*136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.*

#### கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.*
*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.*
*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.*
*செர்ரி ரோடு, சேலம்—636001.*

#### விற்பனை நிலையங்கள்

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*

C 089

**В. И. Ленин**

МАРКСИЗМ И РЕВИЗИОНИЗМ

*на тамильском языке*

**V. I. Lenin**

MARXISM AND REVISIONISM

*in Tamil*

Rs